**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**S.C.No.203/2024**
**வழக்கு சாட்சி PW5**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.பெரியசாமி அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நிர்மல் | தொழில் | : கூலி |
| தகப்பனார் பெயர் | : பெருமாள் | கணவர் பெயர் | : |
| கிராமம் | : நாகப்பன்பட்டி | வயது | : தற்போது 19 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 02.03.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**(CMP No.01/2025 மனுவானது கடந்த 24.11.2025ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை)**

**( 2வது குற்றம் சாட்டப்பட்டவர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை பாரதிய குடிமக்கள் சட்டம் பிரிவு 355ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)**

1, 2 குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

பெருமாள் எனது தகப்பனார் என்றால் ? சரிதான், நவீன் எனது சகோதரர் என்றால் ? சரிதான். நானும், நவீன் என்பவரும் இரட்டை குழந்தைகள் என்றால் ? சரிதான். எனது பிறந்த தேதி 31.08.2006 என்றால் ? சரிதான். சம்பவம் பற்றி கேள்விபட்டு தான் தெரிந்து கொண்டேன் என்றால் ? சரியல்ல. சம்பவம் தினத்தன்று எனது தகப்பனார் பெருமாள் மது அருந்தியிருந்தார் என்றால் இல்லை. சம்பவம் நடந்தபோது நவீன் என்பவரும் என்னுடன் தான் இருந்தார் என்றால் ? சரிதான். சம்பவத்தை நவீன் என்பவரும் நேரில் பார்த்தார் என்றால் ? சரிதான். சம்பவம் நடந்தது வாசல் பகுதி என்றால் ? இல்லை. வாசல் பகுதியில் இருந்த சந்தாகும். சாட்சி மீண்டும் 10 அடி அகலமுள்ள ரோடு என்று பதில் அளித்தார். சம்பவம் நடந்தது இரவு நேரம் என்றால் ? சரிதான். சம்பவம் நடந்த நேரம் 7.15 மணி இருக்கும். எனது தகப்பனார் சம்பவம் நடந்த அன்று மது அருந்தியிருந்ததாக மருத்துவர் தனது சாட்சியத்தில் சொல்லியுள்ளார் என்றால் ? இல்லை. எனது தகப்பனார் மது அருந்தவில்லை. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாதநிலையில், சம்பவத்தை பார்த்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.03.02 13:16:35 +0530

**சார்பு நீதிபதி**
**ஒட்டன்சத்திரம்**